# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்: 1074/2016/பே**
**ஆணை எண். 28/2018/நாள் . 19–02–2018**

**திரு. எஸ். லோகநாதன்,**
**கள்ளிக்காட்டு காலனி,**
**10வது வார்டு ,**
**மேல்புவனகிரி,**
**கடலூர் மாவட்டம்.** -- முறையீட்டு மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**புவனகிரி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** -- எதிர் மனுதாரர்.

**ஆணை**

திரு எஸ். லோகநாதன், த/பெ திரு சுப்பராயன், கள்ளிக்காட்டு கலானி, மேல் புவனகிரி என்பவரது 20.10.2016ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.10.2016அன்று பெறப்பட்டது. முறையீட்டு மனு எண் 1074/2016 என பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்கூண்டவாறு இறுதி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி தொடர்பாக கீழ்கண்ட புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தனது மனைவி மேற்படி புவனகிரி பேரூராட்சியின் 10 வது வார்டு உறுப்பினராக இருப்பதாகவும், தனது வார்டில் அரசின் திட்டங்களான பசுமை வீடுகள், வடிகால் அமைத்தல், சாலை மற்றும் வாட்டர் டேங்க், காம்பவுண்டு செய்து தரக்கோரி தனது மனைவி மேற்படி பேரூராட்சி மன்றத் தலைவரிடமும், செயல் அலுவலரிடமும் முறையிட்டும், அதற்கான

தீர்மானம் வைத்து அனுமதி வழங்காமல் மோசடி செய்து விட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் புவனகிரி பேரூராட்சிக்கு 100 பசுமை வீடுகள் ஒதுக்கீடு பெறப்பட்டதாகவும், மேற்படி வீடுகளை பணக்காரர்களுக்கும், மாடி வீடு உள்ளவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தனது மனுவில் தெரிவித்துள்ளார். தனது வார்டில் 6 வீடுகள் மட்டும் ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்து மேற்கண்ட திட்டங்களை செய்து தர பேரூராட்சி நிர்வாகத்திற்கு உத்திரவிடக் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளதுடன் மேற்படி பசுமை வீடுகள் தொடர்பாக திருமதி வீ. முத்துலட்சுமி, க/பெ திரு வீரன் என்பவர் தனக்கு வீடு வழங்க பேரூராட்சி செயல் அலுவலர் ரூ 20,000/– கேட்டதாக தெரிவித்து எழுதிய புகார் மனுவின் நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 11.09.2016ம் நாளிட்ட அழைப்பாணையின்படி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்யும் பொருட்டு முறையீட்டு மனுதாரர், புவனகிரி பேரூராட்சியின் முன்னாள் 10 வது வார்டு உறுப்பினர் திருமதி எல். சாரதாம்மாள் மற்றும் மேற்குறிப்பிட்ட புகார்தாரர் திருமதி வீ.முத்துலட்சுமி ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 13.11.2017 அன்று நேரில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 10.11.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். அ1/618/2016 நாள் 01.12.2016 ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விவரத்தினை கீழ்கண்டவாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

1. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 10 கள்ளிக்காட்டு காலனியில் உள்ளூர் திட்டம் 2012–13ம் ஆண்டில் ரூ 1.50 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது.
2. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 10–ல் கள்ளிக்காட்டு காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் ரூ 4.00 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் கட்டப்பட்டுள்ளது
3. 2013–14ம் ஆண்டில் வார்டு எண் 10, வாய்க்கால் கரை காலனியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டில் சிறுமின் விசை பம்பு அமைக்கப்பட்டுள்ளது.
4. 2013–14ம் ஆண்டில் கள்ளிக்காட்டு பகுதியில் 10வது வார்டு செட்டித் தெரு நியாய விலைக் கடை ரூ 4.75 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.
5. புவனகிரி 10–வது வார்டு செட்டிக்குளம் நந்தவனத் தெருவில் 2013–14ம் ஆண்டில் பொது நிதியின் கீழ் ரூ 1.50 லட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு மற்றும் மினி பவர் பம்பு அமைக்கப்பட்டுள்ளது.
6. புவனகிரி 10–வது வார்டு கள்ளிக்காட்டு காலனியில் 2013–14ம் ஆண்டில் ரூ 15.00 லட்சம் செலவில் புதிய சுகாதார வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளுடன் 2015–16ம் ஆண்டிற்கு புவனகிரி பேரூராட்சிக்கு அரசால் 100 எண்ணிக்கை பசுமை வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் இதில் SC & ST 33% இதரர்

67% என அரசாணை வெளியிடப்பட்டதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர், புவனகிரி தெரிவித்துள்ளார். மேற்கண்ட ஒதுக்கீட்டில் புவனகிரி பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் சுமார் 1200க்கு மேற்பட்ட குடிசை வீடுகள் உள்ளதாகவும், மேற்படி வீடுகளில் 100 வீடுகளுக்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு உரிய கால கெடுவிற்குள் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு 100 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் அனைத்து கூரை வீடு மற்றும் AC sheet வீடுகள் உள்ளவர்களிடமிருந்து பயனாளிகளை தேர்வு செய்யப்பட்டு சுமார் 800 வீடுகள் இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர், புவனகிரி தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு எஸ். லோகநாதன் த/பெ திரு சுப்பராயன் இம்முறைமன்ற நடுவத்தில் 13.11.2017 அன்று நேரில் ஆஜராகி தனது முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"………தான் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளதாகவும், தனது மனைவி திருமதி சாரதாம்மாள் 10-வது வார்டு (புவனகிரி பேரூராட்சி) மன்ற உறுப்பினராக இருந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். அப்போது ஒவ்வொரு வார்டு கவுன்சிலருக்கும் ஒரு பசுமை வீடு தருவதாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் ஆலோசனைபடி பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் செயல் அலவலரால் கூறப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தான் 10-வது வார்டுக்கு திருமதி முத்துலட்சுமி என்பவரின் பெயரை கொடுத்து இருந்ததாகவும் , ஆனால் தலைவர், துணைத் தலைவர் மற்றும் செயல் அலுவலர் திரு சக்ரவர்த்தி ஆகிய அனைவரும் சேர்ந்து வேறு ஒருவருக்கு கொடுத்துவிட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். 31.07.2015 ல் தனது வார்டுக்கு பொருள் எண் 23ல் (தீர்மான எண் 464) குறிப்பிட்டபடி ரேஷன் கடைக்கு போகும் ரோடு மற்றும் வடிகால் செய்து கொடுக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தான் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சக்ரவர்த்தியிடம் பல முறை கேட்டும் செய்யவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். நபார்டு வங்கியின் மூலம் பெற்ற ஒதுக்கிட்டின்படி அமைக்கப்பட்ட ரோட்டையும் உயர் வகுப்பு பிரிவினர் வசிக்கும் மேட்டுப் பகுதியில் போட்டு தங்கள் ரோட்டை மறுத்துவிட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். வானம்பார்த்த பழைய வாய்க்காலைக் கட்டித் தரக் கோரியதாகவும், அதனையும் கட்டித் தரவில்லை என தெரிவித்துள்ளார். இதனால் தீயணைப்பு வண்டியும் வர இயலவில்லை எனவும், சமுதாயக்கூடம் போன்ற எந்த வேலையும் தனது வார்டில் நடக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். பசுமை வீடுகள் மாற்றியது தவிர மற்ற அனைத்திற்கும் செயல் அலுவலர் திரு சக்ரவர்த்தி என்பவரே பொறுப்பு எனவும், நியாயவிலைக் கடை கட்டி இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கடை திறக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 26.11.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் புவனகிரி பேரூராட்சியின் முன்னாள் 10-வது வார்டு உறுப்பினர் திருமதி எல். சாரதம்மாள்

மற்றும் முறையீட்டு மனுதாரர் தனது மனுவுடன் ஆதார ஆவணமாக தாக்கல் செய்த கடிதத்தின் முகவரிதாரரான திருமதி வீ.முத்துலட்சுமி, க/பெ திரு வீரன் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2018 அன்று நேரில் ஆஜராகி மேற்படி மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய மீண்டும் ஆணையிடப்பட்டது. மேற்படி நபர்கள் இம்முறையும் விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை.

இம்முறைமன்ற நடுவ 27.11.2017ம் நாளிட்ட அழைபபாணையில் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2018 அன்று நேரில் ஆஜராகி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி ஆணைக்கிணங்க இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2018 அன்று நேரில் ஆஜராகி மேற்படி முறையீட்டு மனுவிற்கான தனது விளத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளதோடு மேற்படி மனுவிற்கான கூடுதல் அறிக்கையினையும் சமர்ப்பித்துள்ளார்.

"..........புகார் மனுவில் உள்ள குற்றச்சாட்டு, தான் பணியில் இருந்த காலத்திற்கு முன் உள்ளதாகவும், பசுமை வீடுகள் என்பது பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவை மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் தனக்கு பசுமை வீடு வேண்டும் என பேரூராட்சியில் மனு செய்யவில்லை எனவும், மனுதாரருடைய பகுதியில் திட்டப்பணிகள் ஏதும் நடைபெறவில்லை எனக் கூறுவது உண்மையல்ல எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்து அதற்கான முழு விவரமும் தற்போது சமர்ப்பித்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ள அறிக்கையில், கூடுதலாக அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் புவனகிரி பேரூராட்சியில் உள்ள அனைத்து கூரை வீடு மற்றும் AC .Sheet வீடுகள் உள்ளவர்களிடமிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு சுமார் 800 வீடுகள் பரிந்துரைக்கப்பட்டதாகவும், இதில் 677 வீடுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் வார்டு எண் 10 ல் மட்டும் 92 வீடுகள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரின் புகார் மனு, மற்றும் புகார் மனுவுடன் இணைத்தனுப்பட்டுள்ள திருமதி வீ.முத்துலட்சுமி என்பவரின் கையொப்பமிடப்படாத மனு, புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் செயல் அலுவலரின் நேரடி வாக்குமூலம் மற்றும் செயல் அலுவலரின் கூடுதல் அறிக்கை அகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது 13.11.2017ம் நாளிட்ட வாக்குமூலத்தில் தனது மனைவி **திருமதி எல். சாரதம்மாள் என்பவர் புவனகிரி பேரூராட்சியில் முன்னாள் 10-வது வார்டு உறுப்பினராக இருந்தபோது, அவரின் கணவரான முறையீட்டு மனுதாரரே மேற்படி வார்டின் உறுப்பினர் போல் செயல்பட்டுள்ளாரோ என அவரது வாக்குமூலத்தின் மூலம் சந்தேகத்தை எழுப்புகிறது.** அத்தகைய செயல்பாடு இருந்திருப்பின் அது அரசாணைகளுக்கு புறம்பானது, கண்டிக்கத்தக்கதென்பதை இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்டி ஆணையிடுகிறது. மேலும் முறையீட்டு மனுதாரர் தனது மனுவுடன் ஆதார ஆவணமாக இணைத்தனுப்பியிருந்த திருமதி

வீ.முத்துலட்சுமி என்பவரின் புகார் கடிதத்தில் கையொப்பமே இடப்படாததாலும், இது சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தில் மனுதாரர் அலுவலகத்தில் பசுமை வீடு கோரி மனு செய்யவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதும், மேலும் சம்பந்தப்பட்ட நபர்கள் விசாரணைக்கு ஆஜராகாததும் மேற்படி புகார் மனு ஆதாரமற்றது என்பதையே காட்டுகிறது. எனவே இம்மனு ஆதாரமற்ற / முகாந்திரமற்ற மனுவாகக் கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிட்டுட அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு. எஸ். லோகநாதன்,
த/பெ திரு சுப்பராயன்,
கள்ளிக்காட்டு காலனி,
மேல்புவனகிரி,–608 601
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை, கடலூர்.